பதினைப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889)

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, ரூ. | 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கார்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௬. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஆடிமீ ௧௩௨; ( 1924 ஜூலை 28 ) திங்கட்கிழமை. { இலக்கம்—அ.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## புதகக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்த்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணா 1
5. தசகாரியம் அணா 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (H. 26.)

[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

**லேகியத்தின் முக்கிய குணமாவது.**

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக் குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவும் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனாமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோர்ட்மூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

குளிர்! குளிர்!

## கம்பளிப் போர்வைகள்.

அசல்கம்பளி மிருதுவானது; நீடித்து உழைக்கக்கூடியது;
குளிருக்கு அடக்கமானது; பலவித கலர்களில் கிடைக்கும்;

1ம் நம். போர்வை விலை ரூபா 11.
2ம் நம். ,, ,, ரூபா 10.
3ம் நம். ,, ,, ரூபா 8 அணா 8.

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

"ஸ்ரான்டேர்ட்"

## கொழுக்கியோடுகள்.
### (Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—

முதலாவது, இந்தவோடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இயைந்தவோடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை
(H. 25.)

## புத்தக விளம்பரம்.

(தபாற்செலவு வேறு).

| | ரூ. | சத. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| டை சபாபருவவுரை | 2 | 25 |
| டை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினார்க்கினியம் | 4 | 50 |
| டை சொல். சேனாவரையம் | 4 | 00 |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| டை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| டை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
(Q. 47.)

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாறி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.
அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

## தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.
உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அநேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, முத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நரைச்சல், மேகஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6 திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுத்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 கிராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, கந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறாதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
**R. M. K.** வேலுசாமிபிள்ளை,
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

(Y. 31.)

நமதுபத்திரிகை.

ஆடி அமாவாசி கீரிமலைச் சமுத்திரசங்கம தீர்த்தம் என்னுமிவைகள் நிகழ்தலால் நமது இந்துசாதனம் வருகிற வியாழக்கிழமை வெளி வராது, ஆடிமீ 20௳ திங்கட்கிழமை வெளி வருமென்பதைப் பத்திரிகாபிமானி கட்குத் தெரிவிக்கின்றேம்.


# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஞு ஆடிமீ 13௳ திங்கட்கிழமை.


## அந்தோ! எமக்கோ இது வருமே!!

பண்டைக்காலத்திலே இலங்கையி லுள்ள எல்லாப் பாகங்களிலும் எமது யாழ்ப்பாணமே சித்திரவதையிலும் குரூரக் கொலையிலும் மிகவுங் குறைவாக இருந்த இடமாகும். அக்காலத்திலே இங்குள்ளார் சிங்களநாடுகளிலும் ஏனைய இடங்களிலும் கொலைகள் நடைபெறுவதைக் கேள்வியுற்றமாத்திரத்தே இடிகேட்ட சர்ப்பம்போலத் தியங்குவர். வெளியே புறப்படுவதற்குத்தானும் அஞ்சி ஒதுங்குவர். புகைரதம் இங்கு வருதற்குச் சில வருடங்களுக்கு முன்புதானும் இங்குள்ளார் கத்தியைக் கண்டவுடன் ஐம்புலன்களும் ஒடுங்கி அடங்கும் இயல்புடையா யிருந்தனர். அக்காலத்தில் அளவுவேலையி லமர்ந்திருந்தோர் பெரும்பான்மையும் சிங்களராதலின் அளவுகாரருடன் இடையிடையே இச் சிங்களக் கூலியாட்கள் இங்கு வருவதுண்டு. அவர்கள் இங்குள்ள தெருக்களிற் செல்லும்போது காடு வெட்டுவதற்காகச் செய்யப்பட்ட நீண்ட பிடிகளையுடைய கத்திகளைத் தோண்மேல் வைத்துச் செல்வர். சிங்களர் கொலைப்பிரியரென்றும் கத்திக்காரரென்றும் நம்மவர் எண்ணியிருந்தனர். யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் சாந்தகுணமுடையோர், சரீரதீங்கு புரிய அஞ்சுவோர், கத்தியைக்கண்டோடுவோர், இரத்தக்காயங் கண்டு சித்தங் கலங்குவோரென ஏனைய சாதியாரும் தேசத்தாரும் எமது அரசினரும் பெரிதும் மதித்திருந்தனர்.

இப்பொழுது கால வேற்றுமையினாலும், கிராமங்களில் ஐக்கியமில்லாமையினாலும், அறிவிருத்திக்கேற்ற கல்வியில்லாமையினாலும், கல்வியறிவும் உலக அநுபவமும் சிறிதுமில்லாத வாலிபரின் அதிகாரமேலீட்டினாலும் கொலைப் பிரியராகிய சிங்களருடைய இடத்துக்கு நாம் வந்துவிட்டோம். சாந்த குணசீலராகிய எமது இடத்தைச் சிங்களர் பிடித்துக் கொண்டனர். மேல்நாட்டுக் கொள்கைகளினாலும், புதிய சீர்திருத்தங்களினாலும் நாம் பெற்றுக்கொண்ட பேறு இதுதானோ? எமது பூர்வீகக்கொள்கைகளையும், பழக்க வழக்க ஒழுக்க ஆசாரங்களையும், ஈடேற்றத்தின்பொருட்டு மகான்களால் அருளிச் செய்யப்பட்ட அரிய நீதிமொழிகளையும் கைநழுவ விட்டமையினாலன்றோ இந்த அபகீர்த்திக்கு ஆளானோம். பல கிராமங்களிலே தாழ்ந்த சாதியாரை வதைக்கும் விரோதம் இன்னுமிலைத்திருக்கின்றது. இவ்வித விரோதத்தினாலே கிராமங்களிலுள்ளோர் பலர் பெரும்பொருளிழந்தும், மானமற்றும், சிறையுற்றும், தொழிலிழந்தும், இன்னமும் "மூர்க்கரும்முதலையும் கொண்டது விடா" என்ற முறையில் நிற்பதினாலேதான் சாந்த சீலர்கள் வசித்த எமது நாட்டிற் கொலைகளும் கத்திக் காயங்களும் அதிகரிக்கத் தொடங்கின. சமீபத்திலே இங்கு நடைபெற்ற சுப்பிறீங்கோட்டில் விசாரணை நடத்திய நீதிபதி முதலாவதான கொலை வழக்கில் தீர்ப்புக் கூறுஞ் சமையத்தில் யாழ்ப்பாணம் சாந்தகுணமுடையோர் வசித்த இடமென்றும், சிங்களருக்கே பெரிதும் வழக்கமாயுள்ள குரூர கொலைத் தொழில் யாழ்ப்பாணத்தாரிடம் புகுந்தமை தமக்கு அதிசயமாகவிருக்கின்றதென்றும், அதற்காகத் தாம் பெரிதும் விசனப்படுவதாகவும் சில அரிய போதனைகளை விரித்துக் கூறினர்.

இந்த அபகீர்த்தியும் நிராவசையும் எமது முன்னேற்றத்திற்குரிய பெருந்தடைகளும் எமது சமூகத்தை விட்டு நீங்கத்தக்க மார்க்கங்களை நாம் வகுத்தல் வேண்டும். எமது தருமநூல்களை அறிந்தோரும் அநுபவ முதிர்ந்தோரும் கால பேதத்தை உணர்ந்தோருமாகிய பெரியோர்களே எக்கருமத்திலும் முன்வருதல்வேண்டும். முன்பின் யோசனையின்றி ஒருகருமத்திற் பிரவேசிக்கும் அநுபவமற்ற எமது வாலிபர் தாம்செய்யும் துர்க்கருமங்களினாலே நிராக்கலமும் ஒற்றுமையின்மையும் படுகாயமும் கொலையும் நேர்ந்தபின் ஆப்பையிழுக்கச்சென்ற குரங்கு போல அவலப்படுவதன்றி ஒருசிறிதும் பிரயோசனம் எய்தமாட்டார்கள். இதனாலன்றோ "சிறுபிள்ளை வேளாண்மை வீட்டுக்கு வாராது" என்ற ஒரு முதுமொழி கூறுவர். இங்குள்ள சனத்தலைவர்களும், கிராமாதிபதிகளும், அறிவுடையோரும், சுயநலங் கருதாதோரும் யாழ்ப்பாணம் "யுத்தபூமி" என்று அழைக்கப்படாது முன்னுள்ளதாகிய "சாந்தபூமி" என்னும் அரிய பெயரைப் பெறுவதற்கு முயலுதல் வேண்டும்.

## "கண்ணுதலாலயநோக்கும் கண்களே கண்கள்".

ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் ஈசனைக் கண்டு தரிசிப்பதற்காகவே மாந்தர்களுக்குக் கண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று நூல்கள் கூறும். இது "கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்க" என்பதனாலும், "கண்காள் காண்மின்களோ" என்பதனாலும், "கண்ணுதலாலயநோக்குங் கண்களே கண்கள்" என்பதனாலும் புலனாகும். ஆதலின் ஆலய உற்சவ காலங்களிலேனும் அவன்கழல் கண்டுகளித்தல் எமது பெருங் கடனாகும். மனமானது ஐம்புலன்களால் இடர்ப்படுத்தப்படுதலினாலே அதனை ஒருவழிப்படுத்தல் அரிதினும் அரிது. இதன்பொருட்டாகவே உற்சவகாலங்களில் உணவை ஒறுத்து விரதம் அநுட்டிக்கவேண்டுமென்றும், கண்களைப் பகட்டும் விலையுயர்ந்த பீதாம்பர வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் ஒறுத்தல்வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இக்காலத்தில் ஆலயசற்கருமங்கள் நிலைதளரவும் அடாத துர்க்கருமங்கள் தலைகாட்டவும் நேர்ந்தமைக்குச் சமயப்பிரசாரமின்மையே விசேட காரணமாகுமென்று முன்னரெழுதியுள்ளோம். உலகமானது சற்கருமத்தில் மந்தகதியுடையதாகவும் துர்க்கருமத்தில் வாயுகதியுடையதாகவுமிருக்கின்றது. அழகிய ஆடைகளும் ஆபரணங்களும், நாட்டியம் முதலான வீண்டம்பங்களும் ஆலய தரிசனஞ் செய்யச் செல்வோருடைய கண்களைக் கவர்ந்துவிடுகின்றன. வீண்டம்பங்களிற் பிரவேசிப்போர் தாங்கள் சிவத்துரோகஞ் செய்வதோடமையாது தரிசனஞ் செய்யும் வண்ணஞ் செல்லும் அடியார்களுடைய நோக்கத்தையும் இடர்ப்படுத்திப் பெரும் பழிக்கும் நீங்கா நிரயத்துக்கும் ஆளாகின்றனர். பரமபதியாகிய கடவுள் எழுந்தருளியிருக்கும் ஆலயத்துக்குச் செல்லுதல் எமக்குள்ள குறைகளைக் கடவுளிடம் இரந்து முறையிட்டு இட்டசித்திகளையும் இகபரபோகங்களையும் பெருவாழ்வையும் பெற்றுக் கொள்ளும்பொருட்டேயாம். இத்தகைநோக்கத்துடன்செல்வோர் தமது இரு கைகளையும் பிச்சையேற்கும் பாத்திரமாகக்கொண்டு இறைவன் சந்நிதியில் வீண் டம்பமின்றி அடக்க ஒடுக்க வணக்கங்களுடன் செல்வர். இவர்களுக்கே ஆலய சேவை உரியதாகும். இவர்களே ஆலய சேவையினாற் பெரும் பேறெய்துபவர். இவர்களைத் தரிசிக்கும் ஏனையோர்க்கும் பெரும் பயனுண்டாம். "இறைவரோ தொண்டருள்ளத் தடக்கம், தொண்டர் தம்பெருமை பேசவும் பெரிதே" என்பதனாலும் இவர்களுடைய பெருமை இத்துணைத்தென விளங்கும்.

இன்னமன்றி "விரவுமறுசுவையுடன் வேண்டுவ புசித்து அரையில் வேண்டுவவெலாம் உடுத்தி" வாசனாதிரவியங்களைப் பூசிக்கொண்டு, ஆலயங்களை விவாகமண்டபமெனக் கருதி, சிவசந்நிதானமென்று சிறிதும் நினையாது செல்லும் நமது சகோதர சகோதரிகள் இனியேனும் இந்த அடாத முறைகளை நீக்கிவிடுதல்வேண்டும். ஆலயங்களிலே சிவத்தியானத்திற்குப் பங்கம் விளைக்கக்கூடிய கருமங்கள் எவையோ அவற்றையெல்லாம் நாம் ஒவ்வொன்றாக நீக்கிவிடுதல்வேண்டும். மனமும் ஐம்புலன்களும் பிரபஞ்சவிசாரங்களும் இந்த ஆலயசேவையினாலேதான் ஒடுங்குதல்வேண்டும். இந்த ஆலயச் சந்நிதானத்திலும் கண்கவர் காட்சிகள் நிகழுமாயின் நாம் ஈடேறுவது எங்கே? எவ்விதம்? திருக்கயிலாசத்திலே ஆலால சுந்தரரென்னுமொருவர் விபூதி உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களுடன் கணநாதராகித் திருத்தொண்டு செய்தனர். அவர் ஒருகால் அங்குச் சிவவேடந்தாங்கித் திருத்தொண்டுசெய்யும் நியதியை உடைய அநிந்திதை கமலினி என்னும் இருவரையும் கண்டமாத்திரத்தே, தமது திருத்தொண்டை மறந்து அவர்கள்பால் தமது நோக்கத்தைச் செலுத்தினர். அவர்களும் அவர்போலாயினர், ஸ்தலமோ திருக்கயிலாயம்; அவர்களோ கணநாதர்; செய்ததோ திருத்தொண்டு; வேடமோ சிவவேடம். இவை எவ்விதமிருந்தும் அந்த மகான்கள்தாமும் தங்கள் கடமையை மறந்தனர். அதனாற் கயிலையைத் துறந்தனர். இந்தக் காசினியிற் பிறந்தனர். அக்காலத்திலுள்ள அந்த மகான்களே இவ்விதம் இடர்ப்பட்டனரெனிற் கலிமுதிர்ச்சியும் அந்நியக் கொள்கைகளும் பலசமய அபிமானிகளும் மலிந்துள்ள இக்காலத்திலே எமது ஆலயங்களில் வீண் டம்பங்களும் தாசியர் நடனமும் கண் கவர் காட்சிகளும் நிகழுமாயின் எங்கள் கதி எவ்வாறாகும்? எமது சமய நிலைதான் என்படும்!

ஆதலின் ஆலய தரிசனஞ் செய்யும் அடியார்கள் இன்னமும் கண் தூங்குவது சிறிதும் தகாது. அழகிய விலையுயர்ந்த ஆடைகளும் சித்திரக் கோலங்களுமில்லாது ஆலய தரிசனஞ் செய்தல்வேண்டும். அடியார்களிடம் சிவவேடம் நன்கு பொலிந்து விளங்குதல்வேண்டும். கண்கள் பிரபஞ்சக் காட்சியிற் பிரவேசியாது உற்சவத் திருக்கோலத்தைக் கண்டு தரிசித்தல்வேண்டும்! "ஹரஹரஹர" என்ற மந்திரகோஷம் அதிகரித்தல்வேண்டும்!! திருவருளும் சித்தசமாதானமும் சமய விருத்தியும் ஓங்கி வளருதல்வேண்டும்!!!

## சமாசாரம்.

**தேவி உற்சவம்:**—சென்ற வெள்ளிக்கிழமை வண்ணை தையல்நாயகியம்மை, நல்லை நல்லைநாயகியம்மை, வல்லை தையல்நாயகியம்மை, புலோலி பருபதவர்த்தனியம்மை ஆகிய தேவிகளின் உற்சவம் ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இந்த ஆடிமீ 18௳ சனிக்கிழமை ரதோற்சவமும் அடுத்தநாளாகிய ஆடிப்பூரத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

**வலிகாமம் மேற்கு ஆசிரியர் கூட்டம்:**—இக் கூட்டம் அடுத்த ஆவணிமீ 9௳ காலை சித்தங்கேணிச் சைவஆங்கில வித்தியாசாலையிற்கூடும்.

**சாராயத் தவறணைகள்:**—அராலி கொட்டடி என்னுமிடங்களிலுள்ள சாராயத்தவறணைகளை நீக்கவேண்டுமென அங்குள்ளார் பெருமுயற்சி செய்து வருகின்றனர்.

**புதிய தெருக்கள்:**—யாழ்ப்பாணம் "டிஸ்திரிக்றேட் கொம்மிற்றியார்" முன்னர் மதித்துள்ள மதிப்பில் அதிகபணம் எஞ்சியிருக்கவினால் ஆவசியகம்வேண்டிய இடங்களிலே புதிய தெருக்களை அமைப்பதற்கு யோசனை செய்கின்றனர்.

**அன்னதாழைச் செய்கை:**—யாழ்ப்பாணத்திலுள்ள தென்மராட்சிப் பகுதியிலே அன்னதாழை அதிகமாகச் செய்கைபண்ணப்படுகின்றது. அது அதிகபலனையுங் கொடுக்கிறது. இப்பயிர்ச்செய்கையை இங்குள்ள ஏனையபிரிவுகளிலும் விருத்திசெய்தற்கான யோசனைகள் நடைபெறுகின்றன.

**கிளெறிக்கப் பரீக்ஷை முறை:**—இப் பரீக்ஷையிற் பிரவேசிப்போர் கேம்பிறிஜ் சீனியர் யூனியர், லண்டன் மற்றிக்குலேஷன், ஸ்கூல்லீவிங் சேட்டிபிக்கற் முதலான பரீக்ஷைகளிற் சித்தியெய்தியவர்களாக இருத்தல்வேண்டுமென்றும், இக்கட்டுப்பாடு உத்தியோகத்தருக்கு இல்லையென்றும் கசற் பத்திரிகை கூறுகின்றது.

**கள்ளுத்தவறணைகள்:**—வடமராட்சிப் பகுதியிலுள்ள வல்லுவெட்டித்துறை தனக்காரக்குறிச்சி என்னுமிடங்களிலுள்ள கள்ளுத்தவறணைகளை நீக்குதற்கு அங்குள்ளார் தக்க ஒழுங்குகள் செய்திருக்கின்றனர். இவர்கள் சம்மதம் சொல்லும்பொருட்டு நியமிக்கப்பட்டதிகதி அடுத்த ஆகஸ்ட்மீ 12௳ செவ்வாய்க்கிழமையாகும்.

**எமது வடமாகாண ஏசன்றர்:**—எமது வடமாகாண ஏசன்றராயிருக்கும் மிஸ்டர் L. W. C. ஷிறுதரவர்கள் காலி டிஸ்திறிக் நீதிபதியாக உத்தியோகமாற்றம் பெற்றிருக்கின்றனர். முன் போஸ்மாஸ்டர் ஜெனறலாகவிருந்தவரும், விடுமுறைபெற்று இங்கிலாந்துக்குச் சென்று இப்பொழுது திரும்புவருமாகிய மிஸ்டர் F. J. சிமித் அவர்கள் எமது ஏசன்றராக நியமனம் பெற்றிருக்கின்றனர். எமது புதிய ஏசன்றர் இன்று கொழும்புக்கு வந்து சேருவர்.

**இலங்கைப் புகைரதமும் மாவிட்டபுர உற்சவமும்:**—மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் இரதோற்சவ தீர்த்தோற்சவ தரிசனத்தின் பொருட்டுச் செல்லும் அடியார்களுடைய வசதிக்காக இந்த ஆடிமீ 15௳ (30-7-24) புதன்கிழமை மாலை 4-35 க்கு ஒரு புகைரதம் பளையிலிருந்து புறப்பட்டு 6-35க்கு மாவிட்ட புரத்தைச் சேரும். அன்று பிற்பகல் 2-38க்கு ஒரு புகைரதம் மாவிட்டபுரத்திலிருந்து புறப்பட்டு 4-39 க்குப் பளைக்குப்போய்ச்சேரும். அடுத்த 16-ந் திகதி (31-7-24) வியாழக்கிழமை பகல் 12-35க்கு ஒரு புகைரதம் மாவிட்டபுரத்திலிருந்து புறப்பட்டு 2-28க்குப்பளைக்குப்போய்ச் சேரும். யாழ்ப்பாணத்தில் ஓடும் புகைரதங்களெல்லாம் இந்த ஆடிமீ 14-ம், 15-ம், 16-ம் திகதிகளில் மாவிட்டபுரத்திற்றங்கும்.

**சைவப்பிரசங்கஞ் செய்வதற்கான ஒழுங்கு:**—சைவசமயசம்பந்தமான பிரசாரணங்களை இடங்கடோறுஞ் சென்று பிரசங்கஞ் செய்வதற்கு ஒரு பிரசாரகரைச் சைவாபிமானியாகிய வண்ணார்பண்ணை (அத்தியடி) ஸ்ரீ அம்பலவாணபிள்ளையவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். பிரசங்கஞ் செய்விக்கவிரும்புவோர் காலம் இடம் விஷயம் என்னுமிவைகளை மூன்று நாட்களுக்கு முந்தி இந்துசாதனப்பத்திராசிரியர்கட்கு அறிவித்தல்வேண்டும். ஸ்ரீ அம்பலவாணபிள்ளையவர்களின் சமயாபிமானம் ஏனைய அபிமானிகளாலும் பின்பற்றத்தக்கதாம்.

**ஒரு மீன்பிடிவள்ளம் இன்னும் கரையேறவில்லை:**—சென்றவாரம் மௌவுன்றலவீனு என்னும் இடத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற ஒரு வள்ளம் இன்னும் கரைசேரவில்லை. கடுங்காற்றினால் அழிவாய்ப்பட்டதுபோலும்.

**காட்டுத்தியோகத்தர் கரடியாற் கடியுண்டனர்:**—அமரசேகர என்னும் ஒரு காட்டுத்தியோகத்தர் திரிகோணமலைக் காட்டிலே தமது கடமைபார்க்கச் சென்றபொழுது ஒரு கரடியினால் தாக்குண்டு வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்.

**இலங்கையில் ஓர் பெரிய பாலம்:**—திரிகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலுள்ள புகைரதவீதியில் மகாவலிகங்கை ஆற்றுக்கு மேலாக அமைக்கப்படும் பாலம் இலங்கையிலுள்ள பாலங்களெல்லாவற்றிலும் மிகவும் பெரியதாகும்.

**தீவிபத்து:**—கொழும்பிலே கொம்பனித் தெருவிலுள்ள ஒரு கடை நெருப்புப் பற்றி எரியும்போது உள்ளே உள்ள சாமான்களை எடுக்கச் சென்ற ஒருவன் நெருப்புக் கிரையாகி ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டான்.

**புகைரதக் கிரயக்குறைவு:**-இலங்கைப்புகைரதத் தலைவராகிய கௌரவ மிஸ்டர் ரீ. ஈ. டற்றனவர்கள் இப்பொழுது அறுசரிப்பிலிருக்கும் புகைரதக்கிரயத்தைச் சிறிதுகுறைக்கும் நோக்கமாக ஒரு மனுவை அரசினருக்கு அனுப்பியிருக்கின்றனர். அரசினர் அம்மனுவைப் புகைரத ஆலோசனைச் சபையார் பொறுப்பில் விட்டிருக்கின்றனர். அச்சபையார் அவ்விஷயத்தைப்பற்றி அடுத்த கூட்டத்தில் ஆலோசனை செய்வர்.

**கழுத்துறைப்புற்பெட்டிகள்:**—பிரித்தானிய காட்சியிலே இப்பெட்டிகளுக்கு அதிக சன்மானமுண்டாயது. லண்டனிலிருந்து முறைக்கு முறை வியாபாரிகள் அவைகளை அதிகமாக அழைப்பிக்கின்றார்கள். சிலநாட்களுக்கு முன்னே 2000 ரூபா பெறுமதியான பெட்டிகள் லண்டனுக்கு அனுப்பட்டன. கொள்ளும் விருப்பம் அதிகப்பட்டதினாலே இங்குத் தொழிலாளர் விலையையும் ஏற்றி விற்கிறார்கள். தேயிலை அடைத்து அனுப்புவதற்கும் இப்போது இப்பெட்டிகளே அதிகமாகத் தோட்டத்தலைவர்களால் உபயோகப்படுகின்றன. தேவை அதிகப்படத் தொழிலும் விருத்தியடைகின்றது. பக்கத்துள்ள சுதேசபாஷைப் பாடசாலைப்பிள்ளைகளுக்கும் இத்தொழிலைப்பயிற்ற யோசனைசெய்கின்றனர்.

## இந்திய சமாசாரம்.

**26000 ரூபா மாயமாய் மறைந்தமை:**—காசியிலுள்ள கன்டோன் மென்றதபாற்கந்தோரில் 26000ரூபா மாயமாய் மறைந்து விட்டது. அங்குள்ள போஸ்மாஸ்டர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். விசாரணை நடைபெறுகின்றது.

**குமரன் சிறக்கின்றன்:**-காரைக்குடியிலிருந்து வாரமொருமுறைஇதுகாறும்எட்டுப்பக்கங்களுடன் வெளிவந்த "குமரன்" என்னும்பத்திரிகை இப்பொழுது பன்னிரண்டு பக்கங்களாக வளர்ந்து சிறப்புடன் வெளிவருகின்றது. இது ஓர் சிறந்தபத்திரிகை என்பது இதன் வளர்ச்சியினாலும், இதிற் பொதியப் பெற்றுள்ள அரிய விஷயங்களாலும் புலனாகும். இப்பத்திரிகை மென்மேலும் சிறப்புறுமென்பதே எமது திண்ணம்.

**இந்திய காங்கிரஸ் தலைவர்:**—இவ்வருஷ காங்கிரசுக்கு யாரைத் தலைவராகத் தெரிந்தெடுப்பதென்ற விஷயத்தைப்பற்றிப் பலரும் அபிப்பிராயங் கூறிவருகின்றனர். பலர் மகாத்மாவையே தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று கூறினர். அதுவிஷயமாக மகாத்மா அவர்கள் ஒரு குறிப்பை "யங் இந்தியா"வில் எழுதியிருக்கிறார்கள். அதில் டாக்டர் அன்சாரியையாவது ஸ்ரீமதி சரோஜினி தேவியையாவது தலைவராகத் தேர்ந்தெடுக்கலாமென்று ஆலோசனை கூறுகிறார்கள். கதர், தீண்டாமை, இந்து முஸ்லீம் ஒற்றுமையாகிய மூன்று காரியங்களைத் தவிரத் தாம் சொல்லக்கூடியது ஒன்றுமில்லையென்றும், பிரிட்டிஷ் சரக்குப் பகிஷ்காரத்தையோ அன்றிச் சட்டசபை மூலம் பாமர ஜனங்களை உற்சாகப்படுத்துவதையோ நிறைவேற்றத் தாம் முற்றிலும் தகுதியற்றவரென்றும், தமக்கு நம்பிக்கையில்லாதிருக்கும் வேலைத்திட்டத்திற்கு ஜவாப்தாரியாயிருப்பது தமது இயற்கைக்கு விரோதமென்றுங் குறிப்பிட்டிருக்கிறார்கள். அநேகமாக ஸ்ரீமதி சரோஜினி தேவிதான் இவ்வருஷ காங்கிரஸ் பதவியைப் பெறுவார் போலும். தேவியார் தலைமை வகிப்பது இந்தியாவுக்குஒருபெருமையேயாகும்.

## கடிதம்.

### இந்துசாதன பத்திரிகாசிரியர் அவர்கட்கு.

ஐயா,

சென்ற ஆடிமீ 2உ வியாழக்கிழமை வெளிவந்த 'இந்துசாதனத்தின்' தலையங்கத்தில் 'தேய்ந்து வருஞ்சாதி' என்ற மகுடமிட்டு எழுதியுள்ள விஷயத்தைப் பார்வையிடும் யாழ்ப்பாணத்தமிழ்ப் பெருமக்கள் இனியாவது புதிய உணர்ச்சி பெறுவார்களென்று நம்புகிறேன்.

யாழ்ப்பாணத்தாரை விட எத்தனையோ மடங்கு நீண்டகாலமாய்ப் பற்பல அந்நிய ஆட்சிகளின் கீழ் அடங்கி ஆண்மையற்றுக்கிடந்த இந்தியர் ஆங்கில அரசாட்சியின் கீழ் 40 வருடங்களாகப் புதிய உணர்வு பெற்றுச் சுய ஆட்சியை விரும்பிப் பலமான முயற்சி செய்து இப்போது தாங்கள் விரும்பியிற்றும் லட்சியத்தை யடையும் தறுவாயிலிருக்கின்றனரென்பதை யாழ்ப்பாணத்தமிழர் உணரவில்லையோ?

யாழ்ப்பாணத்தாரின் தற்காலமகேற நிலைமை இந்துசாதனத் தலையங்கத்தில் உண்மையாக வருணிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குச் சுயமரியாதையும் சுதந்தரநோக்கமும் கிடையாது; தாம்பிறந்த நாட்டிற்சிறிதும் அபிமானம் இருப்பதாகக் காணப்படவில்லை. ஆங்கிலம் படித்தோரும் தலைவர்களென்று சொல்லப்படுவோரும் ஆங்கில 'நாகரீகம்' தழும்பி வழியும் கொழும்பு முதலான நகரங்களின் களியாட்டங்களில் திளைப்பதையே பெருமையாகக்கருதிக்காலங்கழிக்கின்றனர். தாய் நாட்டின் நன்மையையும் ஜனங்களின் பொது நலத்தையும் இவர்கள் சிறிதும் கருதாது சுயநலப்பிரியராயிருக்கின்றனர். பலர் மலாய்நாடுகளிலும் தொடுவாய்ப்பகுதிகளிலும் வயிறு வளர்க்கும் பொருட்டுக் குடும்பங்களுடன் சென்று வதிகின்றனர். இவர்கள் சொந்தநாட்டிலேயே செய்யவேண்டிய வேலை அதிகமிருக்கிறதென்பதை யறியவில்லை. இவ்வாறுகச் செல்வாக்கும் கல்வியறிவுமுடையோர், பிறந்த நாட்டை விடுத்துப் பிறவிடங்களுக்குச் சென்றுவிடவே, தாய்நாட்டிலிருந்து கஷ்டப்படும் கல்வியறிவற்ற எளிய ஜனங்களின் குறைகளைப் பற்றிக் கவனிப்பாரில்லை.

நாடு செழித்து நாட்டு மக்கள் சுகவாழ்வெய்துவதற்கு அந்நாட்டின் செல்வத்துறைகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். செல்வத்துறைகளாவன, கமத்தொழில், கைத்தொழில், வியாபாரம் என்னும் இம்மூன்றுமாம். வடஇலங்கையின் பூர்வகாலத்துக்கமத்தொழில் கைவிடப்பட்டமைக்குப் பல பிறகாரணங்களிருந்திருக்கலாம். ஆனால் இப்போதுள்ள காரணம் தேசமக்களின் கவனக்குறைவுதான் என்று நன்கு தெரிகின்றது. யுத்தத்தின் போது உண்டான உணவுப்பொருட்பஞ்சத்தை முன்னிட்டு இலங்கையின் பழைய வன்னிப்பற்றுக்குளங்களைச்சீர்திருத்தியமைத்துக்கமத்தொழிலைப் பெருக்குவதற்கு அரசாங்கத்தார் முயன்றனர். ஆனாற் போதுமான கமக்காரர் இம்முயற்சியிற் கவனம் செலுத்தாததால் அது பயன்படவில்லைப்போலும்.

வியாபாரம் விர்த்தியாவதற்குப் போக்குவரத்து வசதிகள் மிகுதியாய் அமைந்திருக்கவேண்டிய தவசியம். யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும்போக்குவரத்துச்செய்ய றெயில் வேலைப்பட்டிருக்கிறது. ஆனால் மிக நெருங்கிய இந்தியத் துறையுடன் போக்குவரத்துச் செய்வதற்கு இடமில்லை.

யாழ்ப்பாணத் தமிழர் தங்கள் தென்னிந்தியத் தமிழருடன் நெருங்கிய கிளையாளரென்பதையும், தங்களுக்கு வேண்டிய உப்பு முதல் கருப்பூரம் வரை சகல பொருள்களும் தென்னிந்தியாவிலிருந்தேவரவேண்டியிருக்கிறதென்பதையும், சமய சம்பந்தமான யாத்திரையின் பொருட்டுத் தென்னிந்தியாவுக்கு அடிக்கடி போய்வரவேண்டியவர்களென்பதையும் மறந்துவிட்டனர். யாழ்ப்பாணத் தமிழர்களின் தலைவர்களெனச் சொல்லப்படுவோரும் யாழ்ப்பாணத்துக்கும் தென்னிந்தியத் தமிழ்நாட்டுக்கும் உள்ள நெருங்கிய உறவை உணராது, குடியேற்றநாட்டு ஆங்கிலேயரைப்போல நடித்து வருகின்றனர்.

27 வருடங்களுக்கு முன் ஊர்காவற்றுறை, காங்கேசன்றுறை, பருத்தித்துறை, வல்லுவெட்டித்துறை என்ற கடற்றுறைகளில் யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் நாவாய்களும் இந்திய மரக்கலங்களும் நூற்றுக்கணக்காகத் தங்குவதைப் பார்ப்பது எவ்வளவு குதூகலமான காட்சியாயிருந்தது! யாழ்ப்பாணமும் அதனைச் சார்ந்த ஊர்களும் எத்துணைச் செழிப்புற்றிருந்தன! நாடோறும் கப்பல் வியாபாரிகள் இனந்தோறும் வருவதும் போவதுமாய் இருந்ததாய் நகரத்தின் செழிப்பு எத்துணை தாம்ஒங்கிகின்றது! இப்போது யாழ்ப்பாணத் துறைகள் எவ்வாறிருக்கின்றன.

யாழ்ப்பாணத்துச் செல்வமும் சீரும் குன்றியதற்குக் காரணம், அத்துறையின் புராதன கடல்வியாபாரம் அழியவிட்டமைதான் என்பதையும், யாழ்ப்பாணத் துறைகளின் கப்பல் வியாபாரம் அழிவுற்றமைக்குக் காரணம் யாழ்ப்பாணத் துறைகளில் இந்திய ஜனப் போக்குவரத்து நின்றதுதான் என்பதையும் யாழ்ப்பாணத் தலைவர்களில் யாரேனும் சிந்தித்ததுண்டா? அவ்வாறு சிந்தித்துப் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியாவுடன் மிகச்சமீபமாகவும் சுலபமாகவும் சகாயமாகவும் நடைபெற்றுவந்திருக்கும் ஜனப்போக்குவரத்தைத் தடுத்தபோதாவது பின்பாவது ஆட்சேபிக்க முயற்சித்ததுண்டா?

யாழ்ப்பாணத்துச் சைவமக்கள் திருவாரூர் சிதம்பரம் முதலான தென்னிந்திய சிவஸ்தலங்கட்கு வருடந்தோறும் ஆயிரக்கணக்காகப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்து திரும்புவதுண்டு. இவர்கள் முன்பு தலைக்குப் பத்து ரூபாய்க்குட்பட்ட செலவில் யாத்திரைசெய்து திரும்பக்கூடியதா யிருந்தது. இப்போதோ தலைக்குக் குறைந்தது ரூபா 30, 40 வேண்டியிருக்கிறது. இன்னும் யாழ்ப்பாணத்தாரிலேயே நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தஞ்சாவூர்ச்ஜில்லாவின் சிலவிடங்களிற் சாஸ்வதமாய்க் குடியேறியிருக்கின்றனர். இவர்கள் பெண் கொள்வதும் கொடுப்பதும் தாய்நாடாகிய யாழ்ப்பாணப் பகுதியிலேதான். இதனால் ஈழநாட்டிற்கும் சோழநாட்டிற்கும் நெடுங்காலமாகப் பிரிக்கமுடியாத பாந்தவ்யம் இருந்துவருகின்றதென்பது வெளிப்படை. இப்போது இருநாடுகளுக்கும் சுலபமாகிய போக்குவரத்து அசாத்தியமாகிவிட்டது. இதனை யாழ்ப்பாணத் தலைவர்கள் உணர்ந்தனரா?

இலங்கை யரசாங்கத்தார் செய்திருக்கும் பெருங்குறைகளை யகற்றும்பொருட்டுச் சென்ற 20 வருடங்களாகத் தென்னிந்திய தலைவர்கள் செய்துவரும் பெருமுயற்சிகள் யாழ்ப்பாணத் தலைவர்களின் கவனத்துக்கு எட்டவில்லையா? இந்தியத் தலைவர்கள் இதுவிஷயத்தில் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியில் ஆரம்பத்திலிருந்தே யாழ்ப்பாணத் தலைவர்களும் கலந்துகொண்டிருப்பார்களானால், இப்போது யாழ்ப்பாணமும் இலங்கையின் வடமாகாணமும் எத்துணையோ செழிப்புற்றிருக்கு மென்பதில் ஐயமில்லை.

இனியாவது யாழ்ப்பாணத் தலைவர்கள் இவ்விஷயத்தில் முழுக்கவனஞ் செலுத்தி இந்தியாவிலிருந்து ஜனப் போக்கு வரத்துக்கு யாழ்ப்பாணத் துறைகளி லொன்றைத் திறந்துவிடும்படியான முயற்சியெடுத்துக்கொள்வார்களா? இலங்கைச் சட்டசபையில் யாழ்ப்பாணத் தமிழரின் பிரதிநிதியாயிருக்கும் சேர். A. கனகசபையவர்கள் இதுவிஷயமாகச் சட்டசபையில் ஒரு தீர்மானங் கொண்டுவந்து யாழ்ப்பாணத் துறைமுகங்களிலொன்றைத் திறந்துவிடும்படி செய்வார்களானால், யாழ்ப்பாணத் தமிழ்மக்களேயன்றித் தஞ்சைச்ஜில்லா வாசிகளான யாழ்ப்பாணத்தார்களும் மனப்பூர்வமாகக் கடப்பாடுடையவர்களாவார்கள்.

V. V. R.

---

### சைவசமய வளர்ச்சிக்காக நாம் செய்யவேண்டிய வேலையாது?

(முற்றொடர்.)

முதலாவது எல்ல அறங்களுக்கும் அடிப்படையாகவுள்ள சிவகாருண்ணிய நலத்தையே நன்கு வலியுறுத்தல்வேண்டும். மக்களாவாரனைவரும் மாமிச உணவை நீக்கிவிட்டு, மரக்கறி உணவுகளையே மாந்தும்படி செய்தல்வேண்டும். ஒவ்வொரு திருத்தொண்டரும், "நான் இந்த ஆண்டில் நூறு பெயர்களைச் சைவம் பிடிக்கும்படி செய்திருக்கின்றேன்" என எண்ணி எண்ணி இன்புறுமாறு நாம் நாம் இவ்வேலையினைப் பெருவேட்கையோடு செய்தல் வேண்டும். கட்குடியையும் அறவே யொழித்துவிடுதற்குப்பெரும்பாடு படுதல்வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் எவரும்சிறுதெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடாது, சுத்த ஆராதனையே செய்து சுகமாகவாழும்படிவேண்டும். வைதிகரென்போர்செய்யும் உயிர்க்கொலையாகத்தை எவ்வகையாலும் எவரும் ஆதரிக்காத வண்ணம் செய்தல்வேண்டும். பக்தி மார்க்கத்தையே மக்களுக்குப் பெரிதும் வற்புறுத்துதல்வேண்டும். இந்நெறியை வளர்த்தற்குத் துணையாக, ஆறுமுகநாவலரவர்கள் வரைந்துள்ள திருவிளையாடற் புராணவசனம், பெரியபுராணவசனம், கந்தபுராணவசனம் முதலிய புத்தகங்களை நூற்றுக்கணக்காக வாங்கி வைத்துக்கொண்டு அசல் விலைக்கு விற்றல்வேண்டும். சிலதிருத்தொண்டர்கள் சிறப்பாக விபூதி உருத்திராக்கப் பிரசாரஞ் செய்யலாம். இவர்கள் ஆயிரக்கணக்கான விபூதிப்பைகளைத்தைத்துவைத்துக்கொள்ளுதல்வேண்டும். ஏராளமாக ஐந்து ஆறுமுக உருத்திராக்கங்களைக் கயிற்றிற் கோர்த்து வைத்துக்கொள்ளுதல்வேண்டும். மாமிச உணவினை விலக்கிய மக்களனைவருக்கும் சிவகாமத்தினைச் சொல்லி இவ்வுருத்திராக்க மங்கல நாணைப் பூட்டி விடுதல்வேண்டும். உருத்திராக்க தாரணஞ் செய்து கொள்ளுவோர் அனைவருக்கும் ஒவ்வொரு விபூதிப் பையும் கொடுத்தல்வேண்டும். கிராமங்களிலுள்ள சிறு பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் சென்று மாணவர்களுக்கு மிட்டாய், வாழைப்பழம், ஸ்லேட் பென்சில், சிறுகதைப்புத்தகங்கள் முதலியவற்றைக்கொடுத்து அவர்களனைவரையும் மாமிச உணவை விலக்கும்படி செய்து, அன்னோர்க்கு உருத்திராக்க தாரணஞ் செய்தல்வேண்டும். சிறு பிள்ளைகளோ இனிவருங்காலத்து மக்களாதலால் சிறு பள்ளிக்கூடங்கள் முதற் பெரிய பள்ளிக்கூடங்கள் வரையில் நமது தொண்டர்கள் புகுந்து மாணவர்களைச் சிவநெறியிற் பழக்குதல்வேண்டும். பெரிய ஆங்கிலக்கல்லூரிகளிலும், உயர்தரக் கலாசாலைகளிலும் மற்ற நடுத்தரப் பாடசாலைகளிலும், நமது அன்பர்களிற் சிலர் வாரம் ஒருமுறை ஒவ்வொருவகுப்பிற்கும் சன்மார்க்கத்தைப் போதிக்கும் சமயபோதகராகச் சென்று பணிசெய்தல்வேண்டும். இஃது ஒரு முக்கியமான வேலையாகும். இவ்வேலையினைச் செய்தற்குத் துறவிகளும், உத்தியோக ஒய்வு பெற்றுள்ள அன்பர்களும் (Pensioners) அவசியம் முன்வருதல்வேண்டும். இக்காலத்தில் நமது சைவப் பெருமக்களிற் பலர் ஐந்தெழுத்தருளுபதேசம் பெற்றுக் கொள்ளுகின்றார்களில்லை! சுமார்த்தர்களால் உபநயனச்சடங்கு எவ்வாறு சமயப்பிரவேசக் கிரியையாகக் கட்டாயமாக அநுட்டிக்கப்படுகின்றதோ, அவ்வாறே இவ்வைந்தெழுத்தருளுபதேசம் நமது சமயப்பிரவேசக் கிரியையாதலால், கட்டாயமாக எல்லோராலும் அவசியம் அநுட்டிக்கப்படல்வேண்டும். இந் நெறியினை வளர்த்தற்கு ஒவ்வொரு திருக்கூட்டத்தாரும், "நாங்கள் இந்த ஆண்டில் நூறு பெயர்களைச் சமயதீக்கை பெற்றுக்கொள்ளுமாறு செய்துள்ளோம்" என் எண்ணி இன்புற்று வேலை செய்தல் வேண்டும். ஆலய வழிபாடு இக்காலிற் பெரிதும் மறக்கப்பட்டுவருதலால் பொது ஜனங்களுக்கு ஆலய வழிபாட்டின் அவசியத்தை நன்கு வற்புறுத்துதல் வேண்டும். அன்பர்களனைவரும் நாடோறும் அருட்பாக்களைத்தினையும் அவசியம் பாராயணஞ் செய்யுமாறு செய்தல்வேண்டும், இவ்வாறு பாராயணஞ் செய்வதற்கு, ஆறுமுகநாவலரவர்களால் வெளியிடப்பட்டுள்ள அகத்தியர் தேவாரத்திரட்டுடன் கூடிய அருட்பாப் புத்தகம் சாலச் சிறந்தாகும். இவ்வருட்பாப் புத்தகத்தை நூற்றுக்கணக்காக வாங்கிவைத்துக்கொண்டு, பாராயணஞ் செய்யவிரும்புவார்க்கு அசல் விலைக்கு விற்கலாம். அருச்சித்தற்கு, "வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" முதலிய அருச்சனைப் பதிகங்களைப்பாடி மகிழச் செய்யலாம், பலர்க்கு நமது சமயாசாரியர் யாவர் என்பது நன்கு விளங்கவில்லை. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அருட்குரவர் நால்வருமே நமது சமயாசாரியர்கள் என்பதை நன்கு வலியுறுத்தி, அன்னோர் திருவடிகளை அனைவரும் முடிகளிற் புனைந்து போற்றுமாறு செய்தல் வேண்டும். இனிச் சைவப் பெருமக்களாகிய நமக்குச் சிவபெருமானே முழுமுதற் கடவுளாவாரென்பதையும், மூவரில் ஒருவராகிய உருத்திரரல்லர் என்பதனையும் எல்லோரும் இனிது உணருமாறு செய்தல்வேண்டும். மற்றும் நமது சைவ நன்மக்களனைவரும், "நாங்கள் செய்த தவத்தாற் சைவ சமயத்திற் பிறந்து பேரின்பப் பெருவாழ்வு பெறும்பேறு பெற்றுள்ளோம்" என இறுமாப்பெய்தி இன்புறுமாறும், எவரும் எக்காரணங்கொண்டும் புறச்சமயங்களைக் கனவிலும் கருதாதிருக்குமாறும் செய்தல்வேண்டும். இதற்கு முன்னர் நமது சமயமாட்சியினை யறியாது புறச்சமயம் புகுந்துள்ளோரில், இது காலை நமது சமயமாட்சியினை யறியாது புறச்சமயம் புகுந்துள்ளோரில், இது காலை நமது சமயமாண்பினை யுணர்ந்து திரும்பிவர விரும்புவோரைத் தாராளமாகச் சேர்த்துக்கொள்ளுதல்வேண்டும். இவ்வாறு புறச்சமயம் புகுந்து திரும்பிவருவோரை மீட்டும் அழைத்துக்கொள்வதை நாம் ஒருசாலும் மறுக்கலாகாது. நமது சமயாசாரியர் நால்வரில் இருவர் இதற்குப் பெரும் வழிகாட்டிகளாகவிருக்கின்றார்கள். அப்பரெம்பெருமானார் தாமே சமண் சமயம் புக்கு அதிற் சின்னாளிருந்து, மீட்டும் சைவசமயத்திற் பிரவேசஞ் செய்தருளினார்கள். திருஞானசம்பந்தப்பெருமானார் மதுரைமாநகரத்திற் சமணர்களை வாதில் வென்ற காலத்தில் பசுவின் சாணத்தைப் பச்சையாகப் பூசிக்கொண்ட பக்தர்களனைவரும், பசுவின் கன்றுக்குட்டிகளைத் தம் தோள்களிலே தூக்கிக்கொண்டு நின்ற அன்பர்களனைவரையும் சமணர்களென ஒறுக்காது சைவரெனக் காத்தருளினார்கள். இனிப் புறச்சமயம் புகுந்தவர்கள் சைவசமயப்பிரவேசஞ் செய்கின்ற காலத்து, அன்னார் பிராயச்சித்தம் முதலியவற்றிற்காக அதிக செலவு செய்து வருந்தும்படி செய்தலாகாது. திலகவதியார் திருவாளன்றிருநீற்றினை அள்ளித் திருவைந்தெழுத்தை யோதித் திருநாவுக்கரசடிகளின் நெற்றியிற் சாத்தி அன்னாரைச் சைவசமயப் பிரவேசஞ் செய்வித்தது போல, பெரியோரைக்கொண்டு அன்னோர் திருக்கரங்களால் தெய்வ நீற்றினை அள்ளித் திருவைந்தெழுத்தை யோதி நெற்றியிற் பூசுவித்து வருவோரனைவரையும் எளிதிற் சேர்த்துக் கொள்ளுதல்வேண்டும். சேர்த்துக்கொள்ளாவிட்டால், நமது சமயத்திற்குரிய ஜனப்பெருக்கும் வரவரக் குன்றுவதோடு, நமது சமய தர்மமும் பிறழ்ந்து போவதாகும். (வரும்)

—செந்தமிழ்ச் செல்வி.

---

### நமது புராதன வழக்கங்களுக்கு ஆதாரமான சுகாதார தத்துவங்கள்.

மேனாட்டு நாகரீகத்தினால் நமது தேசத்திற் பலவித மாறுதல்களேற்பட்டிருந்தபோதிலும், புராதன வழக்கங்கள் சிலமட்டில் அழியாமலிருந்துவருகின்றன. இன்னமும் இருப்புப்பாதைக்குத் தொலைவிலுள்ள கிராமாந்தரங்களுக்குச் சென்று பார்த்தாற் புராதன கிராம வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளலாம். இந்தியாவின் புராதன நாகரீகத்திற்கும், ஐரோப்பாவின் நவீன நாகரீகத்திற்கும் போராட்டம் ஏற்பட்டுள்ள நகரங்களிலும், பட்டணங்களிலும் புராதன வழக்கங்கள் நழுவி, மேனாட்டு முறைகள் புகுந்துவிட்டன. இத்தகைய போராட்டம் ஏற்படாத கிராமாந்தரங்களில் மகாஜனங்கள் முன்போலவே அடக்கமான வாழ்க்கை கைக்கொண்டு, புராதன வழக்கங்களை அநுஷ்டித்து வருகிறார்கள். மேனாட்டுப் பழக்கங்களைப் பின்பற்ற முயலுவோரைக் கண்டால் அவர்கள் அருவருப்படைந்து, அவர்களைத் திருப்ப முயலுகின்றனர்.

மேனாட்டுப் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளாததற்காக நம்முடைய பெரியோர்களைச் சில புலவர்கள் முட்டாள்களென்கின்றனர். ஆனால் நீடித்திருக்கும் வழக்கமே உத்தமமானதென்கிற சாமான்ய தர்மம் அவர்களுக்குப் புலப்படுவதில்லை. நம்முடைய புராதன வழக்கங்களின் குணங்களை நாம் ஆராய்ந்தறியாவிட்ட போதிலும், பல நூற்றாண்டுகளாக அந்தப் பழக்கங்களினால் வந்திருப்பதிலிருந்து அவைகளில் உத்கிருஷ்டமான அம்சங்கள் இருந்தே தீரவேண்டுமென்று தெளிவாக ஏற்படுகிறது.

நமது வழக்கங்கள் பெரும்பாலும் உத்கிருஷ்டமான சுகாதார முறைகளைத் தழுவியவைகளாகவிருக்கின்றன. அவைகளைக் கிரியாம்சையில் அநுஷ்டித்து வந்தவர்கள் திடசரீரிகளாக இருந்துவந்திருக்கிறார்கள். 80 அல்லது 90 வயதுவரையில் பிறருடைய உதவியின்றித் தங்களுடைய அன்றன்றுடவேலைகளைச்செய்துவந்த நமது பாட்டனார்களுக்கும் 40 வயதிற்குள்ளேயே விருத்ததசையை யடைந்துவிடும் நமக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனிக்கவேண்டும். நமது வாழ்விற்கு அவசியமான சுகாதாரமுறைகளை நாம்அநுஷ்டிக்காமையினாலேயே இக்கதிக்காளாகியிருக்கிறோம். நமது புராதன வழக்கங்கள் சரீரத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுவதற்கு எவ்விதத்தில் அநுகூலமாகவிருக்கின்றனவென்பதைச்சிறிது ஆராய்வோம்.

#### பிராணயாமம்.

முதலாவது, பிராணயாமமாகும். இந்த வழக்கத்தை பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசியர்கள் அநுஷ்டிக்கிறார்கள். ஒரு நாசித்துவாரத்தைக் கையால் அழுத்திக்கொண்டு மற்றொரு நாசித்துவாரத்தால் மெதுவாகச் சுவாசத்தை இழுப்பதும், அந்த நாசித்துவாரத்தைப் பின்பு மூடிக்கொண்டு முதல்நாசித் துவாரத்தால் மெதுவாகச் சுவாசத்தை விடுவதும், இந்தக்காலத்தில் மந்திரத்தைச் செபித்துக்கொண்டிருப்பதுந்தான் பிராணயாமமாகும். முதல் மூன்று வருணத்தாரும் காலையில் 10தடவையும், மத்தியானம் 10 தடவையும், மாலையில் 10 தடவையும் பிராணயாமஞ் செய்கிறார்கள். இதனாற் சரீரத்துக்கு ஏற்படுகிற சௌகரியத்தை நம்மிற் பலர் அறியாமல் இந்த வழக்கத்தையே அடியோடு விட்டுவிடுகின்றனர். இதனால் விபரீதமேற்படும். சாதாரணமாகச் சுவாசம் விடுகையில் அசுத்தமான காற்று முழுவதும் வெளிப்படுவதில்லை. நம்முடையசுவாசாசயத்தில் தாராளமாகக் காற்றுப் போய்ச்சேருவதற்காகத் தினமும் மும்முறை பெருமூச்சிழுக்கவேண்டும். இவ்விதஞ் செய்வதால் நமது சுவாசாசயம் விரிவடைந்து, சரீரசக்தியும் அதிகரிக்கிறது. இவ்விதம் பிராணயாமஞ் செய்துவருகிறவர்களுக்கு க்ஷயம், இருமல் முதலிய சுவாசாசய நோய்களுண்டாவதில்லை. முதல் மூன்று வருணத்தார் தான் பிராணயாமஞ் செய்துவருகின்றனரென்பதை நாம் கவனிக்கவேண்டும். நான்காவது வருணத்தாராகிய சூத்திரர்கள் சரீரப்பிரயாசைப்பட்டு வேலைசெய்வதால் அவர்களுக்குப் பிராணயாமம் செய்யவேண்டிய அவசியமில்லை. ஆனால் உட்கார்ந்தஇடத்தில் வேலைசெய்துகொண்டிருக்கும் முதல் மூன்றுவருணத்தாருக்கும் இது அவசியம்.

#### உபவாச தினம்.

ஏகாதசித் தினத்தில் உபவாச மிருப்பதால் நமது சரீரம் ஆரோக்கியமடைகின்றது. ஜீரணக் கருவிகளி லேற்படுங் கோளாறுகளே பலவித நோய்களுக்குக் காரணங்களாக விருக்கின்றன. நமது ஜீரணக் கருவிகளுக்கு அடிக்கடி ஓய்வு கொடுக்கவேண்டிய தவசியம். ஆகவே, இரண்டு வாரங்களுக்கொருமுறை உபவாசமிருக்கவேண்டுமென விதிக்கப்பட்டிருக்கிறது. பூரண உபவாச மிருக்க முடியாதவர்கள் பலகாரம் அல்லது பழவகைகளைப் புசிக்க அனுமதிக்

கப்பட்டிருக்கிறது. பழங்களிற் சத்துப் பொருள் அதிகமாக இல்லாததால் ஜீரணக்கருவிகளுக்கு அவைகளால் அதிக வேலை ஏற்படுவதில்லை. தவிரவும், அவைகளில் உபயோகமான உப்புச் சம்பந்த மிருப்பதால் நமது ஜீரணக் கருவிகளை அவைகள் சுத்தஞ்செய்து, அசுத்தமான பதார்த்தங்களை வெளிப்படுத்திவிடுகின்றன.

கால்களை அலம்புதல்.

வீடுகளுக்குள் நுழையுமுன் கால்களைச் சுத்தஞ் செய்துகொள்ளவேண்டுமென்று நமது முன்னோர்கள் விதித்திருக்கிறார்கள். நமது வீட்டிற்கு விருந்தாளி வந்தால் முதலிற் கால்களைக் கழுவ நாம் ஜலத்தைக் கொடுக்கிறோம். நம்மில் வைதிகமாக இருப்பவர்கள் கக்கூஸ்களிலிருந்து வெளியே வந்ததும் கால்களையும், கைகளையும், வாயையுஞ் சுத்தஞ் செய்துகொள்ளுகிறார்கள். நமது தேசத்தின் ஆரோக்கியம் கெடாமலிருப்பதற்காக இவ்விரு விதிகளையும் அனுஷ்டிக்கவேண்டிய அவசியத்தை அதிகமாக நான் வற்புறுத்தத்தேவையில்லை. அசுத்தமான தெருக்களில் நடமாடியதினாலாவது, அல்லது கக்கூஸ்களுக்குள் சென்று வந்ததினாலாவது நமதுகால்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் வியாதிக் கிருமிகள் கால்களை அலம்பாவிடில் வீடு முழுவதுஞ் சிதறிவிடுகின்றன. இந்த விதியை நாம் அனுஷ்டித்து வராவிடில் அநேக வியாதிகளுக்கு ஆளாகியிருப்போம்.

வாய் கொப்பளித்தல்.

நமது முன்னோர்கள் அழகிய பற்களுக்குப் பேர்போனவர்களாக இருந்தனர். இக்காலத்திலோ 40 வயதுக்குள் நமது பற்கள் விழுந்துவிடுகின்றன. வைதிகமாகவிருந்த நமது முன்னோர்கள் போஜனத்திற்குப் பின் வாயை நன்றாகக் கொப்பளித்து வந்தனர். இந்தத் தலைமுறையைச் சேர்ந்த நாம் இந்த விதியை அநேகமாக அனுஷ்டிப்பதில்லை. சாப்பிட்டு முடிந்ததும், கைகளை அலம்பிக்கொண்டு, வாயைத் துடைத்துக்கொண்டு வந்துவிடுகிறோம். ஐரோப்பியர்களுடைய சம்பிரதாயத்தை அனுசரித்து இந்தவழக்கத்தை நாம் அனுஷ்டிப்பதால் நமது பற்கள் பழுதடைந்துவிடுகின்றன. சாப்பிடும்போது உணவுப் பொருட்கள் பற்களில் ஒட்டிக்கொள்கின்றன. வாயைக் கொப்பளிக்காவிடில் அவைகள் கெட்டுத் திராவகமாக மாறிவிடுகின்றன. இந்தத் திராவகமானது பற்களைக் கெடுத்து விடும்படி செய்துவிடுகின்றன. சாப்பிட்டதும் வாயைக் கொப்பளித்தால் இவைகள் வெளிப்பட்டு, பற்கள் நல்லஸ்திதியிலிருந்துவருகின்றன. நம்மிற் சிலர் சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வாயைக் கொப்பளித்து, முகத்தையுஞ்சுத்தஞ்செய்துகொள்ளுகின்றனர். இதனாற் போஜனகாலத்திற்கிடையே உண்டாயிருந்த திராவகமானது வெளிப்பட்டுவிடுகிறது.

(வரும்) ஆரோக்கியதீபிகை.

## திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமான ஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஒட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
யாழ்ப்பாணம்.

(H. 23).

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானாற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கியிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

தந்திவிலாசம்:—
றாபி. வல்லுவெட்டித்துறை.
(H. 29.)


இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனாமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

# சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ருபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமமாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் தீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி | 1க்கு | விலை | ரூபா | | 10—0—0 |
| 20 ,, | 40 | ,, | ,, | ,, | ,, | | 5—0—0 |
| 10 ,, | 20 | ,, | ,, | ,, | ,, | | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் சிலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினுல் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்:

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt.(INDIA.)

(H. 27.)



அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேவஓளஷதங்களைத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ளநாளும் மறவாதது.

# மகா வீரிய தங்க பஸ்பம்.

☞ வீரிய விர்த்தியில் மன்மதனுக் கொப்பாவர்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுககும் மேலானது. ஒரு முறைபரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம், சூலை முதலிய சகல கர்ம வியாதிகளும நீங்கும். பத்தியமில்லை.

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

## குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

## குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

கெர்ப்ப எண்ணை.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அநுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

ரோம சங்காரி ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

சர்வபடை நிவாரணி

சகலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணு 8.

பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம். தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2,

வி. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
சி. மலையப்பசாமிப்பிள்ளை,
நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி.

(Q. (B) 46)



உங்கள் குழந்தைகளுக்கு

# லக்ரோஜின்

என்னும்

இயற்கையான பாலுணவை ஊட்டி
நன்மையடையுங்கள்.

இந்தப் பாலுணவே
முலைப்பாலுக்குச் சமானமானது.

இது
தசையையும் என்புகளையும் விருத்தி செய்யும்
சக்திவாய்ந்தது.

இந்த உணவை உண்டு வளர்ந்த குழந்தைகள்
இறுக்கமான தசைநார்களும்
அரோகதிடகாத்திரமு முடையவர்களாய்
இருக்கிறார்கள்.

லக்ரோஜின்

சவலைகளைப் பராக்கிரம முடையவராக்கும்.

இந்த உணவை
இலங்கையிலுள்ள ஔஷதசாலைகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி இடங்களில் கிடைக்காவிடில்
நேரே எங்களுக்கு எழுதுங்கள்.

மாதிரி லக்ரோஜின் உணவும் அதின் விபரங்களடங்கிய புத்தகமும்
உடனே அனுப்பப்படும்.

பிறீ கூப்பன். .H .O

நெஸ்லின் & அங்கிளோ சுவிஸ்
கொன்டென்ஸ்ட் மில்க் கோ.,
தபாற்பெட்டி, 189,
கொழும்பு.

தயவுசெய்து உங்கள் அரிய புத்தகத்தில் (Baby Book) ஒன்றும், மாதிரி லக்ரோஜின் உணவும் கிரயமின்றி அனுப்பவும்.

பெயர்:— ..........

விலாசம்:— ..........

(Q. 49.)


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.